பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 02 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி - கத்தார் மன்னர் சந்திப்பு, இந்தியாவுக்கும், அந்நாட்டிற்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. புதிய குற்றவியல் சட்டங்களை ஜம்மு-கஷ்மீரில் நடைமுறைப்படுத்துவது குறித்து துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் முன்னிலையில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.

3. நாட்டின் வரி குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் சுயசார்பு முயற்சிகள் தொடரும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இதுவரை 54 கோடியே 31 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

5. கத்தார் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – குரேஷியாவின் இவான் டோடிக் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

கத்தார் மன்னர் திரு. ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானியுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள கத்தார் மன்னரை பாலம் விமான நிலையத்திற்கு நேரில் சென்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றார்.

கத்தார் மன்னருடன் அந்நாட்டு அமைச்சர் உள்ளிட்ட உயர்நிலைக் குழுவும் இந்தியா வந்துள்ளது.

இரு தலைவர்களின் பேச்சுகளின்போது பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கத்தார் மன்னருக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று பாரம்பரிய முறையிலான சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது.

பின்னர் குடியரசுத்தலைவர் அளிக்கும் விருந்திலும் கத்தார் மன்னர் பங்கேற்கிறார்.

கத்தார் மன்னருடனான இருதரப்பு பேச்சுகளை தாம் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர், அவருடைய இந்தியப் பயணம் ஆக்கப்பூர்வமானதாக அமைய வாழ்த்தியதாக கூறியுள்ளார்.

இதனிடையே கத்தார் மன்னருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்தவிருக்கும் பேச்சுகள் இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று கத்தார் மன்னரை சந்தித்துப் பேசியது குறித்து திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிமுறைகள் குறித்து தாம் ஆலோசித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, ஜம்முகஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை நடத்தவுள்ளார்.

புதிய குற்றவியல் சட்டங்களில் இடம்பெற்றுள்ள காவல்துறை, சிறை, நீதிமன்றங்கள், விசாரணை உள்ளிட்டவற்றின் ஷரத்துகள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

உள்துறை செயலாளர், ஜம்மு-கஷ்மீர் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்டோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.

<<<>>>>

இந்தியாவின் வரி குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் சுயசார்பு முயற்சிகள் தொடரும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று சர்வதேச சுங்க தின நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சுயசார்பு நடவடிக்கையை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்று கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதுடன் வர்த்தக தடைகளை போக்குவதற்கு அரசு அதிக முன்னுரிமை அளித்து வருவதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு பட்ஜெட்டிலும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன வரி குறைப்புக்கான இலக்கை எட்டுவதற்கும் திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மத்திய மறைமுக வரிகள் வாரியம், உலகளாவிய சுங்க தீர்வையை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், கோவிட் பெருந்தொற்று காலத்தில் சுங்கத்துறையின் செயல்பாடுகள் பாராட்டுக்குரிய வகையில் அமைந்ததாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<>>>>

தில்லியில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

கட்சியின் மூத்த தலைவர்களும் பங்கேற்கவுள்ள இந்தக் கூட்டத்தில், தில்லி புதிய முதலமைச்சர் இறுதி செய்யப்படுவார் என பிஜேபி வட்டாரங்களை மேற்கோள் காட்டி எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தில்லியில் புதிய அரசு பதவியேற்பு விழா ராம்லீலா மைதானத்தில் நாளை மறுநாள் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக நேற்று தில்லி பிஜேபி தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. வினோத் தவ்டே, தில்லி பிஜேபி தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா உள்ளிட்டோர் இந்த ஆலோசனையில் பங்கேற்றனர்.

<<<>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்று ஒரே நாளில் ஒரு கோடியே 35 லட்சம் பேர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

இதுவரை 54 கோடியே 31 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

கும்பமேளாவின் ஒரு நிகழ்வாக ரயில்வே துறை சார்பில் பிரத்யேக கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில் ரயில்வேயின் பாரம்பரியம் மற்றும் எதிர்கால முன்னேற்றங்கள் குறித்து பக்தர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**Chenab** மற்றும் பாம்பன் ரயில் பாலங்களின் மாதிரி வடிவங்கள், அம்ரித் பாரத், வந்தே பாரத் போன்ற ரயில்களின் வடிவங்களும் இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

1965, 1971ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போர் மற்றும் கார்கில் போரின்போது ரயில்வே துறையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு போன்றவையும் கண்காட்சியில் இடம்பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் செபு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் திருவள்ளுவர் சிலையை அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு. ஹர்ஷ்குமார் ஜெயின் நேற்று திறந்து வைத்தார்.

இந்தியா – ஃபிலிப்பைன்ஸ் இடையேயான இருதரப்பு உறவுகளின் 75வது ஆண்டைக் குறிக்கும் வகையில் இந்த சிலை திறக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் இரு நாடுகளின் உயரதிகாரிகள், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<>>>

யுக்ரைனில் 3 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய அதிகாரிகளுடன் சவுதி அரேபியாவில் அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் பேச்சு நடத்த உள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதை அமெரிக்காவும், ரஷ்யாவும் உறுதி செய்துள்ளன.

அமைதியை நிலைநாட்டுவதுடன், ரஷ்யா உடனான யுக்ரைன் நல்லுறவை மேம்படுத்துவது குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது விரிவாக ஆலோசிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

லிபியாவில் உள்ள சூடான் அகதிகளுக்கு உதவுவதற்காக 16 கோடி அமெரிக்க டாலர் உடனடியாக தேவைப்படுவதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சூடான் அகதிகள் லிபியாவில் தஞ்சமடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு நீண்டகால அடிப்படையில் உதவி வழங்குவதற்கு இந்த நிதி அவசிய தேவையாகிறது என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையராக உள்ள திரு. ராஜீவ் குமாரின் பதவிக் காலம் இன்றுடன் நிறைவடைவதை அடுத்து, திரு. ஞானேஷ்குமார் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தேர்தல் ஆணையராக டாக்டர் விவேக் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களின் நியமனத்திற்கான உத்தரவை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ளார்.

<<<<>>>>

கத்தார் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – குரேஷியாவின் இவான் டோடிக் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் டேனியல் - கத்தாரின் முபாரக் சையீத் இணையை வென்றது.

------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய தில்லி அணி, 19 புள்ளி 3 ஓவரில் 141 ரன் எடுத்தது.

142 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் விளையாடிய பெங்களூரு அணி, 16 புள்ளி 2 ஓவரிலேயே 2 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக கேப்டன் ஸ்மிருதி மந்தனா 81 ரன்னும், **Hodge** 42 ரன்னும் எடுத்தனர்.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் குஜராத் - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

--------------

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

முன்னதாக மாலை மணி 5.15க்கு நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

-------------

இந்திய துப்பாக்கிச் சுடும் வீராங்கனை மனுபாக்கர், இந்த ஆண்டுக்கான பிபிசி-யின் சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் 2 தங்கப் பதக்கங்களை வென்று மனுபாக்கர் சாதனை படைத்திருந்தார்.

---------------

5வது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்கள் போதிய பனிப்பொழிவு இல்லாததால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஜம்மு-கஷ்மீரின் குல்மார்கில் வரும் சனிக்கிழமை இப்போட்டிகள் தொடங்க இருந்த நிலையில் மீண்டும் போட்டிகள் தொடங்குவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என மத்திய விளையாட்டு அமைச்சக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**<<<<The End>>>>**